සියලු ම හිමිකම් ඇවිරිණි
முழுப் பதிப்புரிமையுடையது.
All Rights Reserved

බස්නාහිර පළාත් අධ්‍යාපන දෙපාර්තමේන්තුව
மேல் மாகாணக் கல்வித் திணைக்களம்
Department of Education - Western Province

වර්ෂ අවසාන ඇගයීම
ஆண்டிறுதி மதிப்பீடு - 2020
**Year End Evaluation**

| | | | |
|---|---|---|---|
| ශ්‍රේණිය / தரம் / Grade: 11 | විෂයය / பாடம் / Subject: தமிழ் இலக்கிய நயம் | පත්‍රය / வினாத்தாள் / Paper: I | කාලය / காலம் / Time: மணி3 |

**பகுதி 1 இல் 1,2 ஆகிய இரு வினாக்களுக்கும் பகுதி 2,இல் 3 ஆம் வினாவுக்கும் பகுதி 3 இல் உள்ள 4,5,6,7 ஆகிய வினாக்களுள் எவையெனும் இரண்டு வினாக்களுக்கும் எல்லாமாக ஐந்து வினாக்களுக்கு விடை எழுதுக.**

**பகுதி 1**

1 தொடக்கம் 5 வரையுள்ள வினாக்களுக்குச் சுருக்கமான விடை எழுதுக.

i) “வாழியவன் வளநாடு மகவாய் வளர்க்கும் தாயாகி”

அ) தல தாயாக உருவகிக்கப்படுவது யாது ?

ஆ) மேற்படி பாடல்வரி ,டம்பெற்றுள்ள காப்பியம் யாது?

ii) செஞ்சிலை மாரனும் கலகமே செயும் கண் ,துவாம் என மலரம்பு ஐந்தையும் வைத்து வணங்கினான்

அ) மாரன் என்று குறிப்பிடப்படுபவர் யார்?

ஆ) மலரம்புகள் ஐந்தும் எவை?

iii) ஐய! நீ ஆழி வேந்தன் அடியினை பிரிகிலாதாய்,எய்தியது என்னை? என்றாள், இசையினும் னனிய சொல்லாள்.

அ) ஆழி வேந்தன் என சுட்டப்படுபவர் யார்?

ஆ) பாடல்வரியில் வெளிப்படும் தாரையின் சிறப்பு யாது?

iv) முனிதயிர் பிசைந்து காந்தன் மெல்விரல் கழுவுறு கலிங்கம் கழா

அ) இங்கு கையாளப்பட்டுள்ள அணியினைக் குறிப்பிட்டு விளக்குக.

ஆ) “கலிங்கம்” எனக் குறிப்பிடப்படுவது யாது?

5) தனிமனிதத் தத்துவமாம் இருளைப் போக்கிச் சகமக்கள் ஒன்றெனப்துணர்வதற்கு...

அ) இங்கு கையாளப்பட்டுள்ள அணியை குறிப்பிட்டு விளக்குக.

ஆ) மேற்படி கவிவரி இடம்பெறும் கவிதையைப் பாடியவர் யார்?

(4x5= 20 புள்ளிகள்)

2) கீழே காணும் பாடல் பகுதியை வாசித்து தரப்பட்டுள்ள வினாக்களுக்கு விடையை எழுதுக.

வெப்பம் பூ மிதக்கும்
எங்கள் வீட்டுக் கிணற்றில்
தூர் வாரும் உற்சவம்
விசே'மாய் நடக்கும்

ஆழ் நீருக்குள்
அப்பா முங்க முங்க
அதிசயங்கள் மேலே வரும்

கொட்டாங்குச்சி, கோலி, கரண்டி,
கட்டையோடு உள்விழுந்த
துருப்பிடித்த ராட்டினம்
வேலைக்காரி திருடியதாய்
சந்தேகப்பட்ட வெள்ளி டம்ளர்,
சேற்றிற்குள் கிளறி
எடுப்போம் நிறையவே

சேறுடா.... சேறுடாவென
அம்மா அதட்டுவாள்
என்றாலும்
சந்தோசம் கலைக்கும்
யாருக்கும் மனம் வரும்?

பகை வென்ற வீரனாய்
தலைநீர் சொட்டச் சொட்ட அப்பா மேல் வருவார்

அ) இக்கவிதையினூடாக கூறப்படும் விடையம் யாது?

ஆ) தூர்வாருகல்,உற்சவமாகக் குறிப்பிட்ட காரணங்கள் எவை?

இ) "அதிசயங்கள்" எனக் கூறப்படுபவை எவை?

ஈ) தூர் எடுத்தல் நிகழ்வு மகிழ்ச்சிக்குரியது என்பதை வெளிப்படுத்தும் கவிகரிகள் எவை?

உ) "கடைசி வரை அப்பாவும் மறந்தே போனார் மனசுக்குள் தூரெடுக்க" என்ற கவிதை வரி மூலம் கூறப்படும் விடயம் யாது ?

(5×5=25 புள்ளிகள்)

## பகுதி-2

3) கீழ் காணும் உரைப்பகுதியை வாசித்து, தரப்பட்டுள்ள வினாக்களுக்கு விடை எழுதுக.

இயற்கையாக மனதில் தோன்றும் வெறுப்புணர்ச்சிக்கு வடிவு கொடுப்பதன் மூலம் இரண்டு பயன்கள் கிட்டுகின்றன. முதலாவது யாரை வெறுக்கின்றோமோ அவர் மேல் போர்தொடுத்து வெற்றி காணமுடிகின்றது.இரண்டாவது, அவ்வாறு.பெறும் வெற்றியைப் பிறர் புகழவும் காரணமாகிறது.

இவ்வாறு இரண்டு வழிகளிற் பயன்பெறக் கூடுமாயின், வன்மை மிக்க அரசர்கள."போர்" என்ற வழியை மேற்கொண்டதில் வியப்பிருத்தல் இயலாது. மேலும் அந்த அரசர்கள் புரியும் இந்தப் போர்களை தம்முடைய நாட்டு மக்களின் நலத்திற்காகவே செய்ததாகவும் கூறினர் அம்மக்களும் இதை நம்பினர்.

பிறருடைய நாட்டின் மேல் போர் தொடுத்துச் செல்லுதல் அரசர்க்குரிய அறமாகவும் போற்றிக் கூறப்பெற்றது. தற்காப்புச் செய்முறையில் போரிடுதல் அன்றியும் பிறர்மேல் படை கொண்டு வருவோருக்கு மோதலும் அறமெனக் கருதப்பட்டது. பிறருடைய நிலத்தைப் பற்றிக் கவலை கொள்ளாமல் போரிடுதலைக் ஒரு வாய்ப்பாகக்

கொண்டனர். அற்றை நாள் தமிழர் எவ்வளவு பெரிய அரசனும் இதற்கு விளக்குமாறு இல்லை. மேலும் ஓரிரெண்டு போர்களில் வெற்றி கண்டு விட்டால் அது குடிப்பழக்கம் போல் ஆகிவிடும். அவ்வெற்றி தந்தவெறி மேலும் மேலும் போர் செய்யத் தூண்டும்.

அ) இயற்கையாக மனதில் தோன்றும் வெறுப்புணர்ச்சிக்கு முடிவு கொடுப்பதன் மூலம் கிடைக்கும் இரண்டு பயன்கள் எவை?

ஆ) "போர்" என்ற முறையில் அரசர்கள் தமது மக்களை ஏமாற்றிய தன்மை எவ்விதம் கூறப்படுகின்றது.?

இ) போர் செய்தல் அறமாகக் கருதப்பட்ட சந்தர்ப்பங்கள் எவை?

ஈ) புகழ் வேட்டையாட அரசர்கள் செய்த செயல் யாது?

உ) "ஓரிரண்டு போர்களில் வெற்றி கண்டுவிட்டால் அது குடிப்பழக்கம் போலாகிவிடும்" இங்கு கையாளப்பட்டுள்ள அணியினைக் குறிப்பிட்டு அதன் பொருத்தப்பாட்டை விளக்குக.

(5×5=25 புள்ளிகள்)

## பகுதி 3

எவையேனும் இரண்டு வினாக்களுக்கு விடை எழுதுக.

4) கிஷ்கிந்தை படலத்தில்

1) வாரைப் பெண்களின் அழகுத் தோற்றம்

2) தாரையின் விதவைக் கோலம் என்பவற்றை கம்பர் சித்தரிக்கும் மாற்றை விபரிக்குக.

5) எலியம் என்ற சிறுகதையின் அங்கதப்பாகை எடுத்துரைக்குக.

6) ரெஞ்சியர் காண்டம் என்ற நாடகப் பகுதியில்

i) கண்ணகி அனுபவித்த துன்பங்கள்

ii) பெண்கள் மீதான அடிமைத்தனம்

எடுத்துரைக்கப்பட்டிருக்கும் மாற்றை விளக்குக.

7) பெருமரமாகிப் போனதொரு வாழ்வு என்ற கட்டுரையில்

i) ஒளிப்பதிவு

ii) சினிமா கதாபாத்திரங்கள் என்பவற்றில் பாலுமகேந்திரா ஏற்படுத்திய புரட்சிகளை விபரிக்க.

(15×2=30 புள்ளிகள்)

සියලු ම හිමිකම් ඇවිරිණි
முழுப் பதிப்புரிமையுடையது
All Rights Reserved

බස්නාහිර පළාත් අධ්‍යාපන දෙපාර්තමේන්තුව
மேல் மாகாணக் கல்வித் திணைக்களம்
**Department of Education - Western Province**

වර්ෂ අවසාන ඇගයීම
ஆண்டிறுதி மதிப்பீடு - 2020
**Year End Evaluation**

පිළිතුරු පත්‍රය
**Marking Scheme**

| ශ්‍රේණිය / தரம் / Grade | 11 | විෂයය / பாடம் / Subject | தமிழ் இலக்கிய நயம் | පත්‍රය / வினாத்தாள் / Paper | |
|---|---|---|---|---|---|

# புள்ளித்திட்டம்

## பகுதி I

01) i) அ) காவேரி ஆ) சிலப்பதிகாரம்

ii) அ) மன்மதன் ஆ) முல்லை, அசோகம், மாம்பூ, தாமரை, குவளை

iii) அ) இராமன் ஆ) இசையிலும் இனிமையான சொற்களைப் பேசுவான்

iv) அ) உவமையணி (காந்தள் மெல்விரல்)
உவமானம் - காந்தள் மலர்
உவமேயம் பெண்ணின் விரல்
ஆ) பெறுமதியான பட்டாடை

v) அ) உருவக அணி (தனிமனித தத்துவமாம் இருள்)
ஆ) பாரதிதாசன் (4X5 = 20 புள்ளிகள்)

02) i) துர் எடுக்கும் நிகழ்ச்சியினூடாக அம்மாக்களின் அடிமனதின் வலியை அறிந்து கொள்ளாத அப்பாக்களின் பெண் அடிமைத்தனம் கூறப்படுகின்றது.

ii) வருடத்திற்கொருமுறை நிகழ்தல்
குடும்பத்தின் உறுப்பினர்கள் அனைவரும் பங்கேற்றல்
மகிழ்ச்சிக்குரிய நிகழ்வாக அமைந்திருத்தல்

iii) கொட்டாங்குச்சி, கோலி, கரண்டி, கட்டையோடு துருப்பிடித்த ராட்டினம் வேலைக்காரி, திருடிய தாய், சந்தேகப்பட்ட வெள்ளிடமௌர்

iv) சேறுடா - சேறுடாவென
அம்மா அதட்டுவாள்
என்றாலும்
சந்தோசம் கலைக்க
யாருக்கு மனம் வரும்?

v) பெண் அடிமைத்தனம் / பெண் அடக்குமுறை (5X5 = 25 புள்ளிகள்)

## பகுதி II

03) i) யாரை வெறுக்கின்றோமோ அவர்மேல் போர் தொடுத்து வெற்றி காண முடிகின்றது. அவ்வாறு பெறும் வெற்றியை காண முடிகின்றது. அவ்வாறு பெறும் வெற்றியை பிறர் புகழவும் காரணமாகின்றது.

ii) அரசர்கள் புரியும் போர்களைத் தம்முடைய நாட்டு மக்களின் நலத்திற்காகவே செய்ததாகக் கூறியமை

iii) பிறருடைய நாட்டின் மேல் போர்தொடுத்துச் செல்லுதல்
தற்காப்புச் செயல் முறையில் போரிடுவது மட்டுமல்லாது பிறர்மேல் படைகொண்டு வலுப்போருக்குச் செல்வதும் அறமாகக் கருதப்பட்டது.

iv) பிறரைப்பற்றியோ அல்லது அவர்களுடைய நிலத்தைப் பற்றியோ கவலை கொள்ளாது போர் செய்தலை தம் புகழ் வேட்டைக்காகப் பயன்படுத்தியமை.

v) உவமைஅணி
உவமானம் - குடிப்பழக்கம்
உவமேயம் - போர்களில் கிடைக்கும் வெற்றி (5X5 = 25 புள்ளிகள்)

## பகுதி III

பொருத்தமான விடைகளுக்குப் புள்ளிகள் வழங்குக. (15X2 = 30 புள்ளிகள்)



අපොස සා/පෙළ පසුගිය විභාග ප්‍රශ්නෝත්තර පත්‍ර සහිතව ගෙදරටම ගෙන්වාගැනීමට
www.lol.lk
Learn Ordinary Level
LOL.lk online Book Store
LOL.lk
අමතන්න - 071 777 4440/0756999990/071 8540371
G.C.E. O/L PAST PAPERS
අ.පො.ස. සා/පෙළ පසුගිය විභාග ප්‍රශ්නෝත්තර
2010 සිට 2019 දක්වා
A+ GUIDE PAST PAPERS
ගණිතය
MATHEMATICS
විද්‍යාව
SCIENCE
ඉතිහාසය
HISTORY
සිංහල භාෂාව හා සාහිත්‍යය
SINHALA LANGUAGE AND LITERATURE
සංගීතය (පෙරදිග)
MUSIC (ORIENTAL)
තොරතුරු හා සන්නිවේදන තාක්ෂණය
INFORMATION & COMMUNICATION TECHNOLOGY
සෞඛ්‍යය හා ශාරීරික අධ්‍යාපනය
HEALTH AND PHYSICAL EDUCATION
භූගෝල විද්‍යාව
GEOGRAPHY
ඉංග්‍රීසි භාෂාව
ENGLISH LANGUAGE
නාට්‍ය හා රංග කලාව
DRAMA AND THEATRE
නැටුම් (දේශීය)
DANCING (ORIENTAL)
කතෝලික ධර්මය
CATHOLICISM
ව්‍යාපාර හා ගිණුම්කරණ අධ්‍යයනය
BUSINESS & ACCOUNTING STUDIES
බුද්ධ ධර්මය
BUDDHISM
චිත්‍ර
ART
Ex/Press/2019/0034
සමනල දැනුම ප්‍රකාශනයකි.
Online shopping
www.lol.lk
Learn Ordinary Level
DELIVERY ISLANDWIDE
SECURE PAYMENT

# LOL.lk
online Book Store

071 777 4440/0756999990/071 8540371

## පළාත් ප්‍රශ්න පත්‍ර සහ පිළිතුරු පත්‍ර පොත්













## ආදර්ශ ප්‍රශ්න පත්‍ර සහ පිළිතුරු පත්‍ර පොත්

















## කෙටි සටහන් පොත්




වට්ටම් සහිතව ගෙදරටම ගෙන්වාගැනීමට

**www.lol.lk**

**Learn Ordinary Level**

අමතන්න - 071 777 4440/0756999990/071 8540371

PAST PAPERS WIKI

ප්‍රශ්නපත්‍ර පොත්

ගෙදරටම ගෙන්ව ගන්න

ඔන්ලයින් ඔඩර් කරන්න

WWW.LOL.LK

වෙත යන්න

BUY NOW

Secure Payments By PayPal VISA DISCOVER NO PAYPAL ACCOUNT NEEDED!

ONLINE
BOOK STORE

An evening of fun for young readers